**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்**
**மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்**

**MCOP No. 8/2024** 05-02-2026 **ம.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ் | தொழில் | : | |
| க/பெ | : | குப்புசாமி | கிராமம் | : | தொப்பம்பட்டி |
| வயது | : | 58 | தாலுகா | : | தாராபுரம் |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர். பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன். குண்டடம் காவல் நிலைய குற்ற எண். 173/2023 முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் ம.சா.ஆ.1, விபத்து பதிவேட்டு அறிக்கையின் உண்மை நகல் ம.சா.ஆ.2, மாதிரி வரைபடத்தின் உண்மை நகல் 3, பார்வை மகஜர் உண்மை நகல் ம.சா.ஆ.4 TN 40 L 8069 மற்றும் TN 37 AX 7575 வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.5 குற்ற இறுதியறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.6, குப்புசாமிகவுண்டரின் இறப்பு சான்று கணினி நகல் ம.சா.ஆ.7, சடலக்கூறாய்வு அறிக்கை ம.சா.ஆ.8, வாரிசு சான்று கணினி நகல் ம.சா.ஆ.9, மனுதாரர்களின் ஆதார்அடையாள அட்டை புகைப்பட நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது ம.சா.ஆ.10 (வரிசை 3), மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகம் புகைப்பட நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது ம.சா.ஆ.11 (வரிசை 3), மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் கோரப்பட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.05 18:13:46 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.